# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி “கல்வி”


### கல்விக்கோ முனைவர். கோ.விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாடுகள்தாம் வளர்ந்த நாடுகளாக இருக்கும். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பள்ளிக் கல்வியோடு நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால், கிழக்கிந்திய கம்பெனியில் அவர்களுக்கு, கிளார்க் பணிக்குத்தான் ஆள்கள் தேவைப்பட்டனர். ஆனால், இப்போது அந்த நிலைமை இல்லை. மத்திய, மாநில அரசுகள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இந்தியாவில் உயர்கல்வி பெறுவோர் 28.4 சதவீதம். புதிய கல்விக் கொள்கையில் அதை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றுள்ளது. இந்தியாவில் 1,100 பல்கலைக் கழகங்கள், 50 ஆயிரம் கல்லூரிகளில் 4 கோடிப் பேரே உயர்கல்வி கற்கின்றனர். 10 கோடிப் பேருக்கு உயர்கல்வி கிடைப்பதில்லை. உயர்கல்வித் தகுதி பெற்றவர்கள் 14 கோடிப் பேர்.

அனைவருக்கும் உயர்கல்வி வழங்க மத்திய மாநில அரசுகள் அதிக நிதியை ஒதுக்க வேண்டும். உயர்கல்வியைப் பொருத்தவரை தமிழகம் 50 சதவீதமாகவும், கேரளம், கர்நாடகம் 40 சதவீதமாகவும், தெலுங்கானா, ஆந்திரா 30 சதவீதமாகவும் உள்ளன. அதற்குத் தனிநபர் வருமானம் அடிப்படையாக உள்ளது. ஆகவே, எல்லா மாநிலங்களும் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். நாட்டின் 2023-24 ஆம் ஆண்டு பட்ஜெட் ரூபாய். 45 லட்சம் கோடியாக உள்ளது. ஆனால், கல்விக்கு செலவிடுவது ரூ. 1 லட்சம் கோடி மட்டுமே. இந்தியாவைவிட உலகில் 140 நாடுகள் கல்விக்கு அதிகம் செலவிடுகின்றன. எனவே, உயர்கல்வியால் மட்டுமே இந்தியா பொருளாதார ரீதியில் வளர்ச்சியடையும். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை இதுவரை (2012 - 2024 ஆம் ஆண்டு வரை) 8,416 மாணவ மாணவியருக்கு 9 கோடியே 36 லட்சம் ரூபாய் உயர்கல்வி உதவித்தொகையாகக் கொடுத்து இருக்கின்றது.

### திரு. என். பாஸ்கரன், அறக்கட்டளை உறுப்பினர்



பள்ளிக்கல்வியில் நமது இந்தியா 95% மொத்த சேர்க்கை விகிதத்தைக் கொண்டுள்ளது என்று ASER (Annual Status of Education Report) 2022 அறிக்கை கூறுகிறது. ஆனால், உயர்கல்வியில் நாம் இன்னும் 28.4% தான் மொத்த சேர்க்கை விகிதத்தைக் கொண்டுள்ளோம் என்று AISHE (All India Survey on Higher Education) 2022 அறிக்கை தெரிவிக்கிறது. “கல்வி என்னும் மூன்றெழுத்து, மனிதனின் தலையெழுத்தை மாற்றும் சக்தி” கொண்டது என்பதை உணர்ந்து, விஐடி குழுமத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர் கோ. விசுவநாதன் அவர்களின் தலைமையில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2012-ஆம் ஆண்டுமுதல் செயல்படுகிறது. அறக்கட்டளை வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டம், ஜவ்வாது மலை ஒன்றியப் பகுதியை சேர்ந்த 8,700 ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி கிடைக்கவும், இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வியைத் தொடரவும் ஒரு ஏணிப்படியாக உள்ளது. 8,700 மாணவ, மாணவிகள் என்பதைவிட, 8,700 குடும்பங்கள் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் வளர்வதற்கு இந்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவிக்கொண்டிருக்கிறது என்பதில் ஒரு அறங்காவலராக நான் பெருமையாக உணர்கிறேன்.

## மருத்துவர். எஸ். நர்மதா அசோக், அறக்கட்டளை உறுப்பினர்



“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து”

என்ற திருவள்ளுவரின் குறளில் கல்வியின் சிறப்பு மிக நன்றாக எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது.

ஒரு மிகப்பெரிய கல்வி நிறுவனத்தை உருவாக்கி, ஓர் உன்னதமான சமூக சேவை செய்து வரும் நமது **G.V.** ஜயா அவர்களால் உருவாக்கப்பட்ட அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உயர்கல்வி கொடுத்துப் பல குடும்பங்களின் தலைமுறைகளுக்கு உதவுகிறது. ஆரம்பிக்கும்போது கல்வி மட்டும் தந்த இந்த அறக்கட்டளை, கல்லூரி முடித்தபின் அவர்கள் வாழ்க்கைக்கு உதவும் வகையில், அவர்களுக்குப் பெரிய நிறுவனங்களில் வேலை கிடைக்கும் விதமாக அவர்களைத் தயார்படுத்துகிறது, வேலைக்கும் உதவுகிறது. இவ்வளவு உன்னத காரியம் செய்யும் இந்த அறக்கட்டளையில் நான் ஒரு சிறு பங்களிப்பது மிகப் பெருமையாக உள்ளது.

இந்த அறக்கட்டளையின் பணி தொடர என்னால் முடிந்த உதவியைச் செய்ய விழையும் அதே தருணத்தில், இந்த அறக்கட்டளையில் உதவி பெற்ற, பெறும், பெறப்போகும் அனைவருக்கும், என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு



2023-24 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நேர்காணல் 2023 ஜூலை 14, முதல் அக்டோபர் 26, வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ. குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, கணியம்பாடி, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஆற்காடு, திமிரி, வாலாஜா, காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம் மற்றும் சவ்வாது மலை ஒன்றியத்திற்குட்பட்ட 1,206 மாணவ, மாணவியர் தம் பெற்றோர்களுடன் நேர்காணலில் கலந்து கொண்டனர். அதில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெற்றோர் மற்றும் மாணவர்களிடம் நேர்காணலின் மூலம் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிய, அறக்கட்டளைப் பணியாளர்கள் உதவித்தொகை விண்ணப்பித்த மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று களப்பணி செய்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.





## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குதல்

2023 - 24 கல்வி ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி 2023 டிசம்பர் 27, அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா கலை அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முனைவர். எம்.ஆர். ஜெயராம், வேந்தர், எம்.எஸ். இராமையா பல்கலைக்கழகம், பெங்களூரு அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள் மற்றும் நிதிக்குழுத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 957 மாணவ மாணவியர்க்கு ரூபாய். 1,00,00,500/- (ஒரு கோடியே ஐந்நூறு ரூபாய்) கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.


இந்து தமிழ் திசை வியாழன், டிசம்பர் 28, 2023 FRONT PAGE

**உயர்கல்வி வீட்டையும், நாட்டையும் உயர்த்தும்**

விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் கருத்து









10 தினமலர் வேலூர் 28.12.2023

**உயர்கல்விக்கு மத்திய, மாநில அரசுகள் அதிக நிதி ஒதுக்கணும்**

957 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் விஐடி வேந்தர் வலியுறுத்தல்

## உயர்கல்வி Sponsorship



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி செவிலியர் கல்லூரி அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைப் பரிந்துரைக்கும் தகுதி வாய்ந்த ஏழை, எளிய மாணவிகளுக்கு, உயர்கல்வி Sponsorship அளித்து வருகின்றது. அதன் அடிப்படையில் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி செவிலியர் கல்லூரியின் தலைவர் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் திரு. பாலாஜி லோகநாதன் அவர்கள் இந்த ஆண்டும் 3 மாணவியர்க்கு DGNM பிரிவில் உயர்கல்வி sponsorship அளித்துள்ளார்.

## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டு பயிற்சி

**TITLE : Bringing Out The Leader In You**
**Resource Persons : Dr. S. Jose,** Professor, School of Mechanical Engr., VIT University
**Mr. P. Sundar Raj,** Asst. Project Director, UHET.
**Participant : B.Sc Nursing Final Year Students**










தினமலர் | வேலூர் | 5.12.2023

ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி நர்சிங் கல்லூரியில் கருத்தரங்கு

2023 டிசம்பர் 04, அன்று அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் செவிலியர் கல்லூரி இணைந்து நடத்திய Bringing Out The Leader In You - உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வெளிக்கொண்டு வருதல் என்ற தலைப்பில் மாணவியர் தலைமைப் பண்புகளை வெளிக்கொண்டு வருவது பற்றியும், படிக்கும் இடத்திலும் படித்து முடித்து வேலைக்குச் செல்லும் இடத்திலும் எவ்வாறு பயன்படுத்துவது என்றும் பயிற்சி அளிக்கப்பட்டது. முனைவர். எஸ். ஜோஸ், பேராசிரியர், விஐடி பல்கலைக்கழகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியளித்தார். இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அறங்காவலர் திரு. பாலாஜி லோகநாதன், திரு. ஜே. இலட்சுமணன், செயலாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மற்றும் திரு. ப. சுந்தர் ராஜ், உதவி திட்ட இயக்குநர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## SHINE IX பகுதி நிறைவு SHINE X பகுதி தொடக்க விழா











அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர், Pearltri Foundation மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE IX பகுதி நிறைவு மற்றும் SHINE X பகுதி தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2023 ஜூலை 03, அன்று நடைபெற்றது. திரு. கே. ஜவரிலால் ஜெயின், பொருளாளர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். திருமதி. ஜெயா எத்திராஜ், மேலாளர், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் & திரு. ப. சுந்தர் ராஜ், உதவி திட்ட இயக்குநர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. டி. சுப்புரத்தினம், இயக்குநர், SHINE பயிற்சி, Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் பயிற்சியாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## SHINE X பகுதி நிறைவு SHINE XI பகுதி தொடக்க விழா











அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர், Pearltri Foundation மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE X பகுதி நிறைவு மற்றும் SHINE XI பகுதி தொடக்க விழா விஜடி வளாகத்தில் 2023 அக்டோபர் 07, அன்று நடைபெற்றது. திருமதி. எம். அனிதா, மேலாளர், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் & திரு. ப. சுந்தர் ராஜ், உதவி திட்ட இயக்குநர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. டி. சுப்புரத்தினம், இயக்குநர், SHINE பயிற்சி, Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் பயிற்சியாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

### ஓ. பரத்





என்னுடைய அப்பா ஒரு விபத்தில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு வேலை செய்ய முடியாமல் இருக்கிறார். அம்மா இட்லி மாவு அரைத்துத்தரும் இயந்திரத்தை வீட்டிலேயே வைத்து வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். குடியாத்தம், திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 468 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். என் அக்கா ஓ. லாவண்யா 2017 - 18-ல் பி.எஸ்.சி. கணிதம் படித்தபொழுது அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வாங்கிப் பயன் பெற்றார். ஆகையால் நானும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவி தொகைக்கு விண்ணப்பித்ததால், குடியாத்தம் கேஎம்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.சி.எ. உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். மேலும் SHINE VIII பகுதியில் பயிற்சி பெறும் பயிற்சியாளராக இருந்து தற்பொழுது SHINE ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் பயிற்றுநராகப் பணிபுரிகிறேன். நான் படித்து நல்ல வேலையில் இருப்பதற்கு உதவி செய்த அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் பெற்றோரின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அ. காயத்ரி





காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா துணிக்கடையில் தினக்கூலி வேலை செய்கிறார். வேலூர் ஆக்சிலியம் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 998 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக அறிந்து அறக்கட்டளையில் உயர்கல்வி உதவி தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில ஆக்சிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம் B&I படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையின் நேர்முகத் தேர்விலும், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். என்னுடைய தங்கை அ. தனலட்சுமி, ஆக்சிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.பி.எ. பாடப்பிரிவில் சேர்ந்தபொழுது அறக்கட்டளை என் தங்கை உயர்கல்வி பயில்வதற்கும் உதவித்தொகை வழங்கினார்கள், தற்பொழுது நான் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் திட்ட உதவியாளராகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கும் என் வேலைக்கும் உதவி செய்த அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் தங்கையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மு. சின்னா



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, காதர்பேட்டை பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய சிறுவயதிலேயே அப்பா, அம்மா இறந்து விட்டனர். அண்ணன் தேங்காய் சுமைதூக்கும் வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். அரசு உதவி பெறும் இந்து மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 347 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்காக உதவித்தொகை வழங்கி வருவதை நாளிதழில் படித்து, அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். பி.காம். உயர்கல்வி பயில இஸ்லாமியா கல்லூரி (தன்னாட்சி) வாணியம்பாடியில் சேர்ந்த எனக்கு அறக்கட்டளையின் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் திட்ட உதவியாளராகப் பணிபுரிகிறேன். நான் “படிப்பதற்கும், தற்பொழுது அதே அறக்கட்டளையில் பணிபுரிவதற்கும் உறுதுணையாக இருந்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு” நெஞ்சார்ந்த நன்றி.

### ர. கருணாகரன்





என்னுடைய சிறுவயதிலேயே அப்பா, இறந்துவிட்டார். வேலூர் மாவட்டம், குடியாத்தம், புவனேஸ்வரிபேட்டைப் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அம்மா தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்து படிக்க வைத்தார். நான் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 759 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். எனது அக்கா ர. திலகவதி 2017 - 18 ஆம் வருடத்தில் பி.எஸ்.சி வேதியியல், படித்தபொழுது அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித் தொகை வாங்கிப் பயன் பெற்றார். எனவே, நானும் குடியாத்தம் கேஎம்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம். CA பயில அறக்கட்டளையில் உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையின் நேர்முகத் தேர்வில், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் திட்ட உதவியாளராகப் பணிபுரிகிறேன். பயனாளியாக இருந்த என்னை பணியாளராக மாற்றிய அறக்கட்டளைக்கு உளங்கனிந்த நன்றி.

### ர. அபிராமி







என்னுடைய சிறுவயதிலேயே அப்பா இறந்துவிட்டார், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் பகுதியில் வசிக்கிறேன். அம்மா வீட்டு வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். ஆக்சிலியம் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 1035 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக அறிந்து அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில ஆதிபராசக்தி செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையின் நேர்முகத் தேர்வில், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்விப் பயில்வதற்குப் SWFT (சமூக நல நிதி அறக்கட்டளைக்கு) பரிந்துரை செய்தனர். அவர்கள் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பதற்கான நான்கு ஆண்டுகளுக்கும் sponsorship வழங்கினார்கள். தற்பொழுது சென்னை அப்போலோ மருத்துவமனையில் Staff Nurse ஆகப் பணிபுரிகின்றேன். என்னுடைய தங்கை ர. அகிலா, ஆக்சிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம். பாடப்பிரிவில் சேர்ந்தபொழுது அறக்கட்டளை என் தங்கை உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். என் போன்று உயர்கல்வி பயில்வதற்கு வசதியில்லாத மாணவர்களின் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# கல்வி உதவித்தொகை பெற்றவர் 8,416 (2012 – 2024)


## Gender





## First Generation Graduate




## School wise Beneficiaries




## Course




* Intergrated Five Years Courses (like CA/CMA/PG Int./ITI)

## விஐடி குழுமத்தின் நன்கொடை







அறக்கட்டளைத் தலைவர், விஐடி பல்கலைக் கழகத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர். கோ.விசுவநாதன் அவர்களின் 85 ஆவது பிறந்தநாள் விழாவில் விஐடி வேலூர், சென்னை, அமராவதி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் போபால் (மத்தியப் பிரதேசம்) வளாகத்தின் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியத்தை அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.

அறக்கட்டளை உறுப்பினர்கள்



இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.

### முகவரி

உதவி திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFSC Code : IDIB000V086

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**